செ.வெ.எண். 10/ஆகஸ்ட்                                        தேதி : 05.08.2016

**<u>பத்திரிக்கைச் செய்தி</u>**

**<u>திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத ஊராட்சிகளை உருவாக்குதல் ஊராட்சி அளவிலான ஊக்குவிப்பவர்களுக்கு சுகாதாரம் குறித்த திறன் மேம்பாடு பயிற்சியை தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.</u>**





தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) தருமபுரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கில் திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத ஊராட்சிகளை உருவாக்குவதல் ஊராட்சி அளவிலான ஊக்குவிப்பவர்களுக்கு சுகாதாரம் குறித்த திறன் மேம்பாடு பயிற்சியை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் குத்து விளக்கேற்றி, சுகாதாரம் குறித்த திறன் வளர்ப்பு பயிற்சி கையேட்டினை வெளியிட்டு தெரிவித்ததாவது :-

தமிழகத்தை திறந்த வெளி மலம் கழிக்கும் பழக்கமற்ற மாநிலமாக ஆக்குவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அரசு உறுதி பூண்டுள்ளது. அதனடிப்படையில் தருமபுரி மாவட்டத்தில் சுகாதாரத்தை பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தி அவர்கள் கழிப்பறை கட்டவும், பயன்படுத்தவும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்கள் திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத கிராமங்களை உருவாக்கும் நோக்கத்தினை அடைவதற்காக விழிப்புணர்வை பெரிய அளவில் ஏற்படுத்த கூடியவர்களாக இருக்க வேண்டும். தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டங்களின் மூலம் தருமபுரி மாவட்டத்தில் 251 ஊராட்சிகளிலும் கழிப்பறை இல்லாத அனைத்து வீடுகளிலும் கழிப்பறைகள் கட்டி திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத ஊராட்சிகளாக அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2015-16ம் ஆண்டில் 02.10.2015ல் 15 ஊராட்சிகளிலும், 26.01.2016 அன்று நடைபெற்ற கிராமசபை மூலம் 14 ஊராட்சிகளும் ஆக மொத்தம் 29 ஊராட்சிகள் திறந்த வெளியில் மலம் கழிக்காத ஊராட்சிகளாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 2016-17-ம் ஆண்டில் 88 ஊராட்சிகளில் 66 ஆயிரத்து 584 கழிப்பறைகள் கட்டி முடிக்க இலக்கு நிர்ணயம் செய்து முதற்கட்டமாக 15.08.2016க்குள் 10 ஊராட்சிகளிலும், 02.10.2016க்குள் 11 ஊராட்சிகளிலும், 26.01.2017க்குள் 32 ஊராட்சிகளிலும், 31.03.2017க்கும் 35 ஊராட்சிகளும் என ஆக மொத்தம் 88 ஊராட்சிகளில் 100 சதவீதம் தனிநபர் இல்ல கழிப்பறைகள் கட்டி முடிக்கவும், அதற்காக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும் ஒவ்வொரு ஊராட்சிக்கும் கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளிலிருந்து ஒரு ஊக்குவிப்பாளர்களை தேர்வு செய்து அவர்களுக்கு திறன் வளர்ப்பு தொடர்பான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. ஸ்ரீதர், திட்ட அலுவலர் மகளிர் திட்டம் திரு. கல்யாணசுந்தரம், புதுவாழ்வு திட்ட மாவட்ட மேலாளர் திரு. நாராயணன், மாநில உதவி பயிற்சியாளர் திரு. ராஜேஸ்குமார் பாஸ்கர், மாவட்ட பயிற்றுநர் திரு. ஜெயகுமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை உதவி திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர், வட்டார ஒருங்கிணைப்பாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.